**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 09/2023 |
| Name | : Chandrasekaran |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடையார்பாளையத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலைக்கு சென்று வருகிறேன். 17.05.2022 ம் தேதி நான் வேலைக்கு சென்றுவிட்டு மதியம் வீட்டிற்கு வந்தேன். என் அப்பாவிற்கு உடல் நிலை சரியில்லாததால் தாராபுரம் வேல் மருத்துவமனைக்கு சென்றோம். இடது பக்க விலா எலும்பில் அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாக சொன்னார்கள். பிறகு அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கிருந்து திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். எனது அப்பாவிடம் கேட்ட போது அவர் முருகானந்தம் என்பவர் அவருடைய மகள் உடன் சென்று கொண்டிருந்த போது எதற்கு அழும் பிள்ளையை கூட்டிச் செல்கிறாய் என்று என் அப்பா கேட்டதற்கு அதை கேட் நீ யாரடா என்று கேனக்கூதி என்று கெட்ட வார்த்தை பேசி தள்ளிவிட்டுள்ளார். என் அப்பா வீட்டிற்கு வந்துவிட்டார் பின்னால் முருகானந்தம் வீட்டிற்கு வந்து நீ எப்படிடா என்னிடம் பேசலாம் என்று வாய்

தகராறு ஏற்பட்டு அருகில் இருந்தவர்கள் என்னவென்று கேட்டுக்கொண்டிருக்கும் போது முருகானந்தம் கல் எடுத்து என் அப்பாவின் விலா பகுதியில் அடித்துவிட்டதாக என் அப்பா சொன்னார். இது சம்மந்தமாக நான் கணியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **20.05.2022 தேதியிட்ட புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 09/2023 |
| Name | : Subramani |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடையார்பாளையத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த **14.05.2022** ம் தேதி காலை **10.00** மணியளவில் உடையார்பாளையம் தண்ணீர் டேங்க பக்கத்தில் முருகானந்தமும் அவரது அம்மா இடையே முருகனாந்தத்தில் மகளை அழைத்துச் செல்வது சம்மந்தமாக சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் நான் இது சம்மந்தமாக கேட்ட போது என்னை வரவேண்டாம் என்று சொல்லிவிட்டார் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். என் வீட்டிற்கு முருகானந்தம் வந்து பிரச்சனை செய்தார் என் பிரச்சனைக்கு ஏன் வருகிறாய் என்று பிரச்சனை செய்து என்னை கீழே தள்ளிவிட்டார். எனது மனைவி மற்றும் மருமகள் வந்தார்கள் முருகானந்தம் ரோட்டில் கிடந்த கல்லை எடுத்து எனது இடது பக்க விலா எலும்பில் அடித்துவிட்டார். அடித்துவிட்டு எனது பிரச்சனைக்கு வந்தால் கொன்று விடுவேன் என்று மிரட்டினார். என்னிடம் காட்டப்படும் கல் தான் முருகானந்தம் என்னை அடித்தார். **(PR No.66/2022) கல் அரசுத்**

**தரப்பு சான்று பொருள் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி சென்றுவிட்டார். மாலையில் வலி எடுத்ததால் கணியூர் அனிருத் மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்று வலி அதிகமாக இருந்ததால் தாராபுரம் வேல் மருத்துவமனைக்கு சென்றேன் அங்கு செலவாகும் என்பதால் தாராபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் மருத்துவமனையில் சுமார் 10–15 நாட்கள் சிகிச்சை பெற்றேன் சரியாக ஞாபகம் இல்லை. முருகானந்தத்தை நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 09/2023 |
| Name | : Kalavathi |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் உடையார்பாளையத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.2 எனது கணவர் ஆவார். அ.சா.1 எனது மகன் ஆவார். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 2-3 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்தேன் அப்போது சத்தமாக இருந்தது நான் வெளியே வந்து பார்த்தேன் முருகானந்தமும் எனது கணவரும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள் நான் என்னவென்று கேட்டேன். குழந்தை சம்மந்தமாக பேசியதால் பிரச்சனை ஏற்பட்டதாக சொன்னார்கள். முருகானந்தம் என் கணவரை கீழே தள்ளிவிட்டார் சண்டை போட வேண்டாம் என்று என் கணவரை வீட்டிற்கு கூட்டி வந்துவிட்டேன். முருகான்ந 3 தம் வீட்டிற்கு வந்து சண்டை போட்டு கெட்ட வார்த்தை பேசினார் அப்போது அவர் கல் எடுத்து வீசியதில் எனது கணவரின் இடது பக்க விலா எலும்பில் பட்டது. முருகானந்தம் சென்றுவிட்டார். என் கணவருக்கு உடல் நிலை சரியில்லாததால் கணியூர்

மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று வந்து பின்பு வலி அதிகமானதால் தாராபுரத்திற்கு எனது மகன் அழைத்துச் சென்றார். அங்கு **X ray** எடுத்து எலும்பில் அடிப்பட்டதாக சொன்னார்கள் சிகிச்சைக்கு வசதி இல்லாததால் தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். முருகானந்தத்தை நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 09/2023 |
| Name | : Sowmiya |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் உடையாளர்பாளையத்தில் வசித்து வருகிறேன். 17.05.2022 ம் தேதி காலை 10.30 மணியளவில் எனது வீட்டு பக்கத்தில் உள்ள தண்ணீர் டேங்க் பக்கத்தில் எனது மாமனார் சுப்பிரமணியம் மற்றும் முருகானந்தம் பேசிக்கொண்டிருந்தார்கள். முருகானந்தம் எனது மாமனாரை நீங்கள் எதற்கு சொல்கிறீர்கள் என்று பிரச்சனை செய்தார். எனது மாமனார் வீட்டிற்கு வந்துவிட்டார் வீட்டிற்கு வந்த பின்பு முருகானந்தம் எனது மாமனாரை கல் எடுத்துப் போட்டு இடது பக்கத்தில் அடித்தார். எனது மாமனாருக்கு வலி அதிகமாக இருந்ததார் கணியூர் அனிருத் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் இரவு வலி அதிகமாக இருந்ததால் தாராபுரம் வேல் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம்.

அங்கிருந்து தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். முருகானந்தத்தை நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 09/2023 |
| Name | : Baskar |
| P.W. | : 5 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் உடையாளர்பாளையத்தில் வசித்து வருகிறேன். ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.2 எனது அப்பா, அ.சா.1 எனது தம்பி, அ.சா.3 எனது அம்மா, அ.சா.4 எனது தம்பி மனைவி ஆவார். 17.05.2022 ம் தேதி என் அப்பாவிற்கு உடல் நலம் சரியில்லாததால் என் தம்பி தாராபுரம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். என் அப்பாவிற்கு இடது பக்க விலா பகுதியில் அடிப்பட்டது. என் அப்பாவை 17.05.2022 ம் தேதி காலை 10.00 மணிக்கு சண்டை கட்டி பக்கத்து வீட்டுக்காரர் முருகானந்தம் கல்லால் அடித்து காயம் ஏற்படுத்தினார். முருகானந்தத்தை நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட

முடியும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்